Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 09 வெள்ளிக்கிழமை (25.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 270

# யாழ். – திருமலை பயணிகள் கப்பல் சேவை; தீர்க்கமான முடிவு எதுவும் இன்னும் இல்லை

## சரக்குக் கப்பலில் ஏற்றிச் செல்வது சாத்தியமே இல்லை எனத் தெரிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட் 25

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்துவது குறித்துத் தீர்க்கமான முடிவு எதுவும் இன்னும் எட்டப்படவில்லை.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பு வட்டாரங்கள் இத்தகவலை நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.

நேற்றுமாலையில் மேற்படி கப்பல் சேவை சம்பந்தமாக ஆராயும் கூட்டம் ஒன்று நடைபெற்றதாகவும், அதிலும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அறியவந்தது.

இதேவேளை -

பருத்தித்துறையை நேற்று வந்தடைந்த மேர்ஷ் றுகுணு கப்பலில் பயணிகளை ஏற்றிச் செல்வது சாத்தியமே இல்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பு வட்டாரங்கள் உதயனுக்கு மேலும் தெரிவித்தன.

குடாநாட்டிலும் ஏனைய மாவட்டங்களிலும் ஏ-9 பாதை மூடப்பட்டதால் உரிய இடங்களுக்குச் செல்ல முடியாமல் கஷ்டமுறுவோரின் நலன்கருதி திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றுப் பிற்பகலுடன் ஓமந்தைச் சாவடி மூடப்பட்டது

வவுனியா,ஓக.25

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடி நேற்றுப் பிற்பகலுடன் மீண்டும் மூடப்பட்டது.

கடந்த இரண்டு நாள்க்ளாக பொதுமக்களின் போக்குவரத்துக்கென இந்த சோதனைச் சாவடி திறக்கப்பட்டிருந்தது. நேற்று நண்பகல் வரை வவுனியாவில் இருந்து இருவர் மட்டுமே ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு பிரவேசித்தனர். ஆனால், புலிகளின் பகுதியில் இருந்து எவரும் வவுனியாவுக்கு வரவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நண்பகலுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர மோட்டார் தாக்குதலை அடுத்து ஓமந்தை சோதனைச் சாவடி மூடப்

(04ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் இன்று வன்னிக்கு!

கிளிநொச்சி, ஓக.25

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் லாஸ்ஜென் ஸோல்வ்பேர்க்கும், பதவி விலகிச் செல்லும் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சனும் இன்று கிளிநொச்சி செல்கின்றனர். விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனை இவர்கள் பிற்பகல் 2.30 மணிக்கு சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

தரை வழியாக கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ள இவர்கள் மரியாதையின் நிமித்தமான சந்திப்பு ஒன்றையே மேற்கொள்கின்றனர் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் மூலம் தவறிழைத்து விட்டது ஐரோப்பிய ஒன்றியம்

### கடுமையாகச் சாடுகின்றார் கண்காணிப்புக் குழுத் தலைவர்

கொழும்பு, ஓக.25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கும் முடிவை எடுத்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் பெரும் தவறிழைத்து விட்டது என்று சாடியிருக்கின்றார் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஸன்.

சுவீடன் நாட்டவரான அவர் இன்னும் ஒரு வாரத்தில் - ஓகஸ்ட் 31 ஆம் திகதியுடன் - கண்காணிப்புக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகுகின்றார். இந்நிலையில் கொழும்பில் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் வைத்து ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு சாடியிருக்கின்றார்.

அவர் தற்போதைய இலங்கை நிலைமையின் பின்னணி குறித்துத் தெரிவித்த தகவல்களின் சாராம்சம் வருமாறு:-

கடந்த மே மாதம் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிப்பதற்கு முன்னரே - ஒரு மாதத்திற்கு முன்பே - இது சம்பந்தமாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எச்சரிக்கைக்

(04ஆம் பக்கம் பார்க்க)



## தலைக்கு மேலே யுத்த விமானங்கள் அமைதிப் பேச்சு எப்படி சாத்தியமாகும்?

### தயா மாஸ்டர் இப்படிக் கேட்கிறார்

கிளிநொச்சி, ஓக.25

''தலைக்கு மேலே யுத்த விமானங்கள் பறக்கும்போது பேச்சு நடத்துவது எப்படிச் சாத்தியமாகும்?''

- இப்படிக் கேள்வி எழுப்புகிறார் விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தயா மாஸ்டர் கூறியதாவது:-

''ஸ்ரீலங்கா அரசின் யுத்த விமானங்கள் சிறிது நேரத்துக்கு முன்னர் கூட எமது பிரதேசத்துக்கு மேலாக வட்டமிட்டுச் செல்கின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் அமைதிப் பேச்சுகள் எப்படிச் சாத்தியமாகும்?

''சமாதானத்துக்கு அறைகூவல் விடுக்கும் அரசு தனது வேண்டுகோளில் இதய சுத்தியுடன் செயற்பட விரும்பினால் அமைதிக்கான புறச்சூழலை முதலில் உருவாக்க வேண்டும்.

''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான பாதைகள் அனைத்தையும் மூடி மக்களுக்குப் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது இராணுவம். இதனால், இயல்புநிலை பாதிக்கப்பட்டுப் பாரிய பொருளாதாரச் சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளனர் மக்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில்

(04ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம் கோயில் வீதியில் தீ வைத்து எரிப்பு!

### நள்ளிரவு வேளை சம்பவம்; சொத்துக்கள் முழுவதும் நாசம்

யாழ்ப்பாணம் ஓக.25

யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகம் நேற்று முன்தினம் இரவு தீயிட்டு கொளுத்தப்பட்டிருக்கிறது.

ரி.ஆர்.ஓ. என்று அழைக்கப்படுகின்ற இந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இலங்கை அரசில் பதிவுசெய்யப்பட்ட ஓர் அரசசார்பற்ற நிறுவனம். வடக்கு-கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் அலுவலகம் திறந்து இயங்கி வருகிறது ரி.ஆர்.ஓ.

அதன் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் கோயில் வீதியில் இயங்கிவந்தது. நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் அந்த அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டிருக்கிறது.

அலுவலகத்தில் இருந்த கணினிகள், தளபாடங்கள், கோவைகள் உட்பட அனைத்துப் பொருள்களுமே எரிந்து சாம்பலாகின.

இந்த அலுவலகம் தீயில் எரிகின்றது என்ற தகவல் நள்ளிரவு வேளையில் யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவினருக்கு கிடைத்தது. உடனே தீயணைப்பு பிரிவினர் அங்கு சென்று தீயை அணைத்தனர்.

எனினும், கணினிகள் உட்பட பெறுமதி

(04ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதிக்குள் நுழைவதற்கு நேற்று எவருக்கும் அனுமதியில்லை!

யாழ்ப்பாணம்,ஓக.25

தீவுப்பகுதிக்குள் உள்நுழையவோ, அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கோ நேற்று எவரும் அனுமதிக்கப்படவில்லை.

வழமைபோன்று, ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்து, தீவுப்பகுதியில் கடமையாற்றும் அரச அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் நேற்றுக்காலை பண்ணை நுழைவாயில் பகுதியைச் சென்றடைந்தனர்.

இந்த நிலையில், அங்கு கடமையிலிருந்த படையினர் இன்று (வியாழன்) தீவுப்பகுதிக்குள் உள்நுழைய எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று கூறி அங்கு கூடியவர்களை திருப்பி அனுப்பிவிட்டனர் என்று கூறப்பட்டது.

இதேபோல், தீவுப்பகுதியின் பல்வேறு

(04ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறையில் 'றுகுணு' கப்பல்

யாழ்ப்பாணம்,ஓக.25

குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகள் யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசரமாகத் தேவைப்படும் பொருள்களுடன் நேற்று மாலை வந்து சேர்ந்துள்ள 'றுகுணு' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும்பணி இன்று பருத்தித்துறையில் ஆரம்பமாகவிருக்கின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அனுசரணையுடன் வந்துசேர்ந்துள்ள இந்தக் கப்பல், தற்போது காங்கேசன்துறைக் கடற்பரப்பில் 20 கடல் மைல்களுக்கு அப்பால் தரித்துள்ளது என்றும் -

இன்று பருத்தித்துறைக்குச் சென்று பொருள்களை இறக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் - என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திருமண வைபவ இடமாற்றம்

27.08.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 8 – 9.20 மணிக்கு

*செல்வன் சி.ராகவன்* அவர்களுக்கும்

*செல்வி த.றஜிதா* அவர்களுக்கும்

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற விருந்த திருமண வைபவம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நிகழும் என்பதையும், அதனைத் தொடர்ந்து மணமகன் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெறும் என்பதையும் தங்களுக்குத் தெரிவிப்பதோடு இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்

திரு.திருமதி. சிவகுமார்
'துவாரகா'
மூளாய்,
சுழிபுரம்.

திரு.திருமதி. தம்பிராசா
'செவ்ஜோதி இல்லம்'
மீசாலை மேற்கு,
மீசாலை.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில்*
*14 * 08 * 1931*



*ஆண்டவன் அடியில்*
*25 * 08 * 2003*

### அருள்திரு செ.பா ஜெயசிங்கம்

"உயிர்ப்பும் உயிரும் நானே எனில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்."

அருளப்பர் - 11:25

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*

*தகவல்:*
**மனைவி.**

யுத்தத்தை உடன் நிறுத்துமாறு தேசிய சமாதன பேரவை கோருகின்றது.

## புதிய யுத்த நிறுத்த உடன்படிக்கை மூலம் அதிகரித்து வரும் மனிதாபிமான சோகத்தை முற்றாக மாற்றுங்கள்.

அரசாங்கத் தரப்பினருக்கும், எல்.ரீ.ரீ.ஈ யினருக்கும் இடையில் கடந்த சில வாரங்களாக, பரவலாக இடம்பெற்று வரும் கடுமையான சணடை பாரிய மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மனிதாபிமான ஊழியர்களைப் பொறுத்தவரை நிலைமை 20 ஆண்டு யுத்தகாலத்தில் இருந்தது போன்று ஏன் அதற்கும் கூடுதலாக மோசமாகியுள்ளது. இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் இருந்து ஒரு லட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளனர். நாள்தோறும் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. சண்டை காரணமாக இடம்பெயர்ந்து அல்லது வேறு விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச மனிதாபிமான விதிகளுக்கமைய காப்பாற்றப்பட வேண்டும் என்றும் தேசிய சமாதானப் பேரவை கோருகின்றது.

வடக்குக் கிழக்கில் தீவிரமாக இடம்பெறுகின்ற போதிலும் இந்தக் கட்ட யுத்தம் பிரகடனப்படுத்தப்படாதுள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும். யுத்த நிறுத்த உடன்படிக்கையின் நிச்சயமற்ற அந்தஸ்து காரணமாக தண்டனைக்கு அச்சமின்மையான சூழலும் மனிதாபிமான நடத்தைக்கான சர்வதேச விதிமுறைகளைப் பேணும் தன்மையும் காணப்படவில்லை. முக்கியமாகத் தேவைப்படும் இடங்களுக்கு, நிவாரண உதவிகளை எடுத்துச் செல்வதற்கு தம்மால் முடியவில்லை என்று மனிதாபிமான அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பல லட்சக்கணக்கான மக்கள், அநேகமாக முஸ்லிம்கள் மூதூர் பட்டினம் தாக்கப்பட்டதால் இடம்பெயர நேரிட்டதையும் கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதால் இதே அளவிலான தமிழ் மக்கள் இடம்பெயர நேர்ந்ததையும் தேசிய சமாதானப் பேரவை கண்டிக்கின்றது.

முல்லைத்தீவில் நூற்றுக்கும் மேற்பட்ட விடலைப்பருவப் பெண்கள் கல்வியில் பயிற்சியை பெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், விமானப்படை குண்டுவீச்சுத் தாக்குதலால் கொல்லப்பட்டும் காயப்பட்டதுமான சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். மூதூரில் 16 தமிழ் மற்றும் ஒரு முஸ்லிம் உதவிப் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையும் கண்டிக்கின்றோம். அரசாங்க சமாதான செயலகத்தின் பிரதித் தலைவர் கேதீஸ் லோகநாதன் அவரது கொழும்புக்கு அருகிலான இல்லத்தில் கொல்லப்பட்டதையும் கொழும்பில் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலையும் அதன் விளைவாக 7 பாதுகாப்புப் படையினரும் சிவிலியன்களும் கொல்லப்பட்டதையும் கண்டிக்கின்றோம். பாதுகாப்பு படையினரால் வாகனங்களில் பெரும் எண்ணிக்கையிலான கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமை மேலும் இத்தகைய பல தாக்குதல் நடைபெறக்கூடும் என்பதைப் புலப்படுத்துகின்றது.

தேசிய சமாதானப் பேரவை யுத்தத்திற்கும், கொலைகளுக்கும் உடனடியாக முற்றுப்புள்ளி வைத்து அரசாங்கமும் எல்.ரீ.ரீ.ஈ.யும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறது. மக்களிடையே பெரும் பீதி உணர்வு காணப்படுகிறது. சகல பாடசாலைகளும் முன்பே மூடப்பட்டமை நெருக்கடியை நன்கு உணர்த்துகின்றது. பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் புரையோடும் பிணக்குக்கே உத்தரவாதமளிக்கப்படும். அது முழு அளவிலான யுத்தமாக அல்லது உயிரை உறிஞ்சும் கெரில்லா யுத்தமாக வெடிக்கும். இராணுவ யுத்த களத்தில் தற்காலிக வெற்றி பெறப்படினும் ஒரு விடயம் முக்கியமானது, இனப்பிரச்சினையை யுத்தம் மூலம் தீர்க்க முடியாது. சகல எதிர்ப்பு நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தி புதிய யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்த பேச்சுக்களை நடத்துமாறு நாம் அரசாங்கத்தையும் எல்.ரீ.ரீ.ஈ யினரையும் கேட்டுக் கொள்கின்றோம். அதேநேரம் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின்படி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தரம் கட்டாயமாக மதிக்கப்பட வேண்டும் என்ற நியதியில் நாம் இதனை வலியுறுத்துகின்றோம்.

(இவ்வறிக்கை மும்மொழிச் செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது)


மெலிந்த சரீரத்திற்கு வலிமையான வளர்ச்சி

APPETON
WEIGHT GAIN™
சக்திமிகு பால்மா பானம்




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251


## திருமணநாள் ஒத்திவைப்பு

27.08.2006 [ஆவணி 11ஆம் நாள்]
ஞாயிற்றுக்கிழமை
ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில்

**செல்வன் தனுஷன்** அவர்களிற்கும்

**செல்வி தர்சினி** அவர்களிற்கும்

நடைபெறவிருந்த திருமணம் தற்போது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நடைபெறும் காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பெற்றோர்:*

திரு.திருமதி.இராஜேந்திரன்
58/3, செட்டித்தெரு,
நல்லூர்.

திரு.திருமதி.குணரட்ணம்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

## யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு

சங்கத்தில் கடமையாற்றும் நிரந்தர, தற்காலிக ஊழியர்கள் அனைவரும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நேரத்தில் கடமைக்குச் சமுகமளிக்கவும்.

*பொதுமுகாமையாளர்,*
*யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)*
*திருநெல்வேலி கிழக்கு.*
*கோப்பாய்.*




## உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள்: **13 55 64 69**

சுப்பர் இல. **04**

ஜக்பொட் பரிசு ரூ. **11,043,500/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இல. + சுப்பர் இல. | 0 | 11,043,500/- | - |
| 4 இல. | 02 | 1,000,000/ | 2,000,000/- |
| 3 இல. + சுப்பர் இல. | 26 | 5,000/- | 130,000/- |
| 3 இல. | 438 | 1,000/- | 438,000/- |
| [illegible] | 1452 | 500/- | 726,000/- |
| 2 இல. | 20994 | 40/- | 839,760/- |
| 1 இல. + சுப்பர் இல. | 20085 | 20/- | 401,700/- |
| 1 இல. | 299099 | 10/- | 2,990,990/- |
| மொத்தம் | | | 7,526,450/- |
| [illegible] | 5 | 120,000/- | 600,000/- |
| [illegible] | 342101 | | 8,126,450/- |

| | |
|---|---|
| அநுராதபுரம் | 201380553-8-01 |
| மாத்தறை | 201378833-8-05 |
| குருணாகல் | 201383910-4-94 |
| மாத்தளை | 201383296-8-92 |
| பொலன்னறுவை | 201379254-2-49 |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ.11,842,900/-**

அபிவிருத்தி லொத்தர் சபை

### போதகர் குடும்பத்தைக் காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக 25

மீசாலை கிழக்கில் இயங்கிய இலங்கை அப்போஸ்தல சபையின் போதகர் வின்சன் வீநோதராஜா (வயது 35) அவரது மனைவி மற்றும் 9 வயதுப் பிள்ளை ஆகியோரை காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சோமசுந்தரம் அவனியூவைச் சேர்ந்த நல்லையா ஜெபராசா என்பவர் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

இவர்கள் தொடர்பான தகவல் தெரிந்தால் மனித உரிமை ஆணைக்குழு யாழ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு வேலுப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு - இளந்தாரி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு (தம்பிமுத்து) வேலுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) 13.08.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியை செல்லம்மாவின் (பரமேஸ்வரி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கௌரி (ஆசிரியை) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் திருவருள், அருள்மொழி, வளர்மதி, மாதுமை ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரமூர்த்தி, சுரேசன், பாமா, ஜீவராணி ஆகியோரின் மாமனும் மாறன் (பேராதனைப் பல்கலைக்கழகம்) நிரோஜன், சைந்தவி, கனிமொழி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம், ஆசிரியர், காந்தி, பொன்னையா, இலட்சுமிப்பிள்ளை, சோதிப்பிள்ளை, ஆசிரியை திருமதி.கனகம் சத்தியானந்தசிவம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.08.2006 திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

*தகவல்:*
**சி.கந்தசாமி**
*(மருமகன்)*
*ஏழாலை வடக்கு.*

### குமாரசாமி கனகரட்ணம்



மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும் தோப்பு, அச்சுவேலியை வதிவிடமாகவும், தற்போது லண்டனில் வசித்தவருமாகிய குமாரசாமி கனகரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 23.08.2006 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஜெயமலரின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் செந்தில்கிரி (லண்டன்), கலாவல்லி (லண்டன்), முருகதாஸ் (லண்டன்), செந்தில்தேவி (திருநெல்வேலி), கௌரிதேவி (லண்டன்), பத்மலோஜினி (லண்டன்), செந்தில்வேல் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாலினி (லண்டன்), தெய்வேந்திரம் (லண்டன்), மைதிலி (லண்டன்), பாக்கியலிங்கம் (கச்சேரி, யாழ்ப்பாணம்), கேதீஸ்வரலிங்கம் (லண்டன்), சிவராசா (லண்டன்), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புச் சகோதரனும் லதுர்ஷன், சாரங்கன், நிலானி, சரவணன், சாயிகிருஷ்ணா, சௌமியா, ஆதவன், சுஜிதா, மயூரி, றொசானி, கஜானன், சங்கவி, பிரவீன், சீதா, சேயோன், அஞ்சலி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடம் வீதி, திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 00442089424628*

*தகவல்:*
**ரீ.பாக்கியலிங்கம்**
**(மருமகன்)**

### திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா

சோலையகட்டை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா 23.08.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (பொலிஸ்) மனைவியும் சிவதாரணி, மனோரஞ்சிதமலர், சிவலோகநாதன் (கனடா), காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், பாலச்சந்திரன் மற்றும் குகச்சந்திரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), நித்தியானந்தம், சிவானி (லண்டன்),வசந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சிவகரன் (லண்டன்),தக்கி, சுது, ஜனார்த்தனன், கௌசி, ஜோஜல், திவ்வியா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற முத்தையா, செல்லம்மா, இராமசாமி மற்றும் பொன்னம்மா, அன்னம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.08.2006) வியாழக்கிழமைஅவரின் இல்லத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

*மல்லாகம்.*

*தகவல்:*
**சி.சிவராசா (மருமகன்)**
**தக்கி, சுது**

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 18.07.2006 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**ஐயம்பிள்ளை வரதராஜன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.08.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 27.08.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நவாலி றோட், ஆனைக்கோட்டை.*

- குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ஊடகங்களின் குரல்வளையை நெரிக்கும் நிலை தீவிரம்

"யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்கள், பத்திரிகை நிறுவனப் பணியாளர்கள் மற்றும் பத்திரிகைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் உதவ வேண்டும்."

- இவ்வாறு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கின்றது வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்.

கடந்த 11 ஆம் திகதிக்குப் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலையை அடுத்து ஊடகப் பணியாளர் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் வீறு பெற்றிருக்கின்றன.

குடாநாட்டிலிருந்து வெளியாகும் ஊடகங்களின் குரல்வளையை வன்முறை மூலம் அடக்கும் ஒரு 'பயங்கரவாதம்' வடக்கில் - அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் - கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

'உதயன்' விநியோகப் பணியாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். 'உதயன்' நிறுவனத்துக்குச் சொந்தமான களஞ்சியம் தீயிடப்பட் டது. மற்றொரு பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அச்சுறுத்தல் காரணமாக பத்திரிகைகளை விநியோக மையங்களுக்கும், முகவர்களுக்கும் எடுத்துச் செல்லும் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாயிரமாம் ஆண்டில் ஊடகவியலாளர் நிமலராஜன் கொடூரமாகக் கொல்லப்பட்டமை போன்ற நிலைமை வடக்கில் மீள உருவாகி வருகின்றது.

இந்தியப் படைகளுடன் சேர்ந்திருந்து அட்டூழியம் பண்ணிய ஈ.பி.ஆர்.எல்.எவ். - ஈ.என்.டி.எல்.எவ். கும்பல், இலங்கையை விட்டு இந்தியாவுக்குப் புறப்பட முன்னர் - 1989 ஆம் ஆண்டுக் கடைசிப் பகுதியில் - இவ்வாறுதான் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஊடகங்களின் குரல்வளையை ஒரே சமயத்தில் நசுக்கியது.

சுமார் மூன்று மாதங்கள் யாழ். பத்திரிகைகளை வெளிவர விடாமல் தடை செய்து, அவற்றின் இயந்திரங்கள், காகிதாதிகள் போன்றவற்றைச் சூறையாடி, அந்த நிறுவனங்களின் ஊழியர்கள் பலரைக் கடத்திக் கொண்டுபோய்த் தடுத்து வைத்திருந்து, அவர்களைப் பயன்படுத்தித் தானும் ஒரு பத்திரிகை அடித்துப் பார்த்துக்களைத்துப் போனது அந்தக் கூட்டம்.

யாழ்ப்பாணத்தின் பழமையான நாளிதழான ஈழநாடு அலுவலகம் அரச சக்திகளினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமையும், 'ஈழநாடு', 'முரசொலி', 'ஈழமுரசு' போன்ற பத்திரிகை அலுவலகங்களின் இயந்திரங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமையும் கடந்த காலச்சரிதங்கள்.

இதேபோன்றுதான், 'உதயன்' அலுவலகம் மீது பிரேமதாஸா அரசு விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது. சந்திரிகா அரசு அலுவலகத்தை 'சீல்' வைத்து இழுத்துப் பூட்டியது. மூன்றரை மாதங்களுக்கு முன்னர் ஆயுததாரிகள் குழு புகுந்து பணியாளர்களைச் சுட்டுக் கொன்று, காயப்படுத்தி, உடைமைகளுக்கு நாசம் விளை வித்தது.

இவ்வளவுக்குப் பின்னரும் குடாநாட்டிலிருந்து வெளிவரும் நாளிதழ்களின் செயற்பாட்டை முற்றாக முடக்கி விடும் முயற்சி மூர்க்கம் பெற்றிருக்கின்றது. அதற்கு வசதியாக ஊரடங்கு. மேலிடத்து அனுமதியும், ஆசீர்வாதமும் கண்டும் காணாமல் இருப்பதற்கான உத்தரவும் கூட.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் யாழ். ஊடகத்துறையைக் காப்பாற்ற சர்வதேச சமூகத்தின் உதவியைக் கோரியிருக்கின்றது வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்.

வட இலங்கைப் பத்திரிகையாளர்களின் நிலைதான் தெற்கிலும் தமிழ் ஊடகவியலாளருக்கு. தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் ஊடகவியலாளர்கள் கொழும்பு அரசின் சீற்றத்துக்கும், சினத்துக்கும், எரிச்சலுக்கும் ஆளாகியிருக்கின்றார்கள். கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அரசுப் படைகளுக்கும், புலிகளுக்கும் இடையிலான இராணுவப் பலப் பரீட்சையின் விளைவாக ஏற்படும் எரிச்சல், தமிழ்த் தேசியத்தின்பால் கருத்துக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள் மீது திருப்பி விடப்பட்டிருக்கின்றது. இது ஆரோக்கியமான போக்கு அல்ல.

தமிழ் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அடக்குவதன் மூலம் தமிழர் எழுச்சியை அடக்கி விடலாம் என்றோ அல்லது தென்னிலங்கை விரும்பும் தீர்வைத் தமிழர் மீது திணித்து விடலாம் என்று கருதுகிறதா?

தமிழ் ஊடகங்களுக்கு - குறிப்பாக குடாநாட்டில் உள்ள ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு - எதிராக இழைக்கப்படும் வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல் குறித்து விசேட கவனம் எடுத்து, ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளைச் சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டிய அவசர, அவசிய காலகட்டம் இது.

விடயங்களை உரியவர்களின் கவனத்துக்கும், சிரத்தைக்கும், உரிய நடவடிக்கைக்கும் உரிய முறையில் கொண்டு வந்து, விளைவுகளின் விபரீதம் குறித்து எச்சரித்து, ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் தனது பொறுப்பை சர்வதேச சமூகம் விரைந்து ஆற்ற வேண்டும். அப்படிச் செய்யாமல் தவறிய பின்னர், விளைவுகள் குறித்து வெறும் கண்டன அறிக்கைகளையும், வருத்தம் தெரிவிக்கும் செய்திகளையும் அது விடுவதில் அர்த்தமில்லை.

"ஒவ்வொருவருக்கும் தமது கருத்தை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமை உண்டு. அந்தச் சுதந்திரத்தை மதிக்கும் ஓர் அரசியல் வாதியாகவே எனது பாதை கடந்து வந்திருக்கின்றது. அதனால்தான், பத்திரிகைத் தணிக்கை முறையை நடைமுறைப்படுத்துவதை நான் ஏற்றுக் கொள்ள வில்லை."
- என்று கூறுகின்றார் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆனால், அவரின் அரசினது கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ். குடாநாட்டில்தான் சுயாதீன ஊடகங்களின் குரல்வளையை நெரிக்கும் 'பயங்கரவாத'த்துக்கு ஆசீர்வாதம் அளிக்கப்பட்டிருக்கின்றது. 'மஹிந்த சிந்தனை' இதற்கு என்ன பதில் கூறப்போகின்றதோ.......?

# ஆறு மணிநேர ஊரடங்குத் தளர்வால் மக்களுக்கு ஓரளவு அவகாசம் கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஓக.25

ஊரடங்கு முதன்முறையாக நேற்று ஆறு மணிநேரம் தளர்த்தப்பட்டிருந்ததால் மக்கள் தமது அன்றாடக் கருமங்களைச் செய்வதற்கு ஓரளவு அவகாசம் கிடைத்தது.

இரண்டு மணிநேர ஊரடங்கு நீக்கம் செய்யப்பட்டிருந்த வேளைகளில் மக்களால் தமது அன்றாட அலுவல்களைச் சரிவரச் செய்துமுடிக்க இயலவில்லை.

ஆனால், நேற்று தூர இடங்களில் இருந்து நகருக்கு வந்தவர்கள் தமது கருமங்களை கணிசமான அளவுக்கு செய்து முடித்ததை அவதானிக்க முடிந்தது.

பஸ் சேவைகள் கணிசமான அளவு இடம்பெற்றதால் நகரில் அதிக சனக் கூட்டம் காணப்பட்டது. யாழ். ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை பெற்றுச் செல்வதற்காக வந்தோரின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருந்தது.

நேற்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கமக்காரர்கள் தங்கள் நிலங்களில் பயிர்செய்திருந்த மரக்கறிகள் மற்றும் விளைபொருள்களைப் பிடுங்கி வந்து வீதியோரங்களில் வைத்து விற்றனர்.

முந்திரிகைப் பழம் உட்பட மரக்கறிகள் மற்றும் விளைபொருள்களை மலிவான விலையில் பெற முடிந்ததால் மக்கள் முண்டியடித்து வாங்கினர். நல்லூர் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழாவுக்குச் சென்றவர்களும் மலிவு விலையில் மரக்கறிகள் வாங்கிச் சென்றதைக் காணமுடிந்தது.

வங்கிகளிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் தங்கள் பணப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டனர். உணவு, மருந்து விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களோடு ஏனைய பாவனைப் பொருள்களை விற்கும் கடைகளும் நேற்றுத் திறந்திருந்தன.



இடித்து தரைமட்டமாக்கப்பட்ட நிலையில், கரும்புலி மில்லரின் சிலை.

# முதற் கரும்புலி மில்லரின் உருவச்சிலை தரைமட்டம்

கரவெட்டி, ஓக. 25

விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படைப்பிரிவின் முதல் வீரர் கப்டன் மில்லர். 1987 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டிருந்த நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம் மீது கரும்புலித்தாக்குதல் நடத்திய மில்லரின் நினைவாக அந்தப் பாடசாலையில் நிறுவப்பட்டிருந்த அவரது உருவச்சிலை நேற்றுமுன்தினம் இரவு உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலப்பகுதியில் நிறுவப்பட்டிருந்த மில்லரின் சிலை 1996 ஆம் ஆண்டு குடாநாட்டைக் கைப்பற்றிய அரச படைகளால் துவம்சம் செய்யப்பட்டிருந்தது.

2002இல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்த பின்னர் அந்தச் சிலை மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்டது. நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் மில்லரின் புதிய சிலையும் அடித்து உடைத்து தரைமட்ட மாக்கப்பட்டிருக்கிறது. இரவு 9.30 மணியளவில் அந்தப் பகுதியில் நாய்கள் குரைத்த சத்தம் அதிகமாகக் கேட்டதாகவும்-

நேற்றுக்காலை ஊரடங்கு தளர்த்தப்பட்டவேளையில் அப்பகுதியால் சென்று பார்த்தபோது மில்லரின் சிலை உடைக்கப்பட்டிருந்ததாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை- நேற்றுக்காலை முதல் நெல்லியடிப்பகுதியில் வழமைக்கு மாறாக பெருமளவு படையினர் குவிக்கப்பட்டிருந்தனர் என்றும் - அப்பகுதியால் சென்ற மக்கள் இராணுவத்தினரால் தீவிர சோதனைக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டனர் என்றும் அறியப்படுகிறது. (த-70)

## கூட்டுறவுக் கிளைகள் மூன்றில் பொருள்கள் சூறை

அரியாலை,ஓக.25

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று சங்கக் கிளைகள் உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

குருநகரில் உள்ள 33ஆம் இலக்க கிளை, கொழும்புத்துறை 22ஆம் இலக்க கிளை, ஸ்ரான்லி வீதியில் உள்ள 15ஆம் இலக்க கிளை என்பனவற்றின் மீதே கைவரிசை காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கிளைகளில் இருந்த பெறுமதியான உணவுப் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

- இதேசமயம் - சங்கத்தின் ஏனைய கிளைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்படுவதைத் தவிர்ப்பதற்கு பொதுமக்கள் முன்வரவேண்டும் என்று சங்கம் கேட்டுள்ளது. (17)

## மின்சார விநியோகம் ஓரளவு சீரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25

குடாநாட்டில் மின்சார விநியோகம் ஓரளவு சீராக்கப்பட்டுள்ளது என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தினமும் காலையில் 6 மணிமுதல் 8 மணிவரையும் ஊரடங்கு நீக்கப்படும் நேரங்களிலும் இரவில் 7 மணி முதல் 11 மணிவரையும் சுழற்சிமுறையில் மின்விநியோகம் இடம்பெறும் என்றும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மின்விநியோகத்தை மேற்கொள்வதற்கான டீசல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும் -

இதன் காரணமாக மின்விநியோகம் ஓரளவு சீராகியுள்ளது என்றும் - அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (1)

## தீவக கல்வி வலய அதிபர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஓக.25

தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்கள், இம் மாதத்துக்குரிய சம்பளப் பட்டியலை இன்று வெள்ளிக்கிழமை [illegible] வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# குடாநாட்டின் நிலைமைகளை அனுசரித்து பாடசாலைகளைத் திறப்பதற்கு அனுமதி

## மாகாணக் கல்விச் செயலர் அறிவிப்பு

திருகோணமலை,ஓக.25

குடாநாட்டின் நிலைமைகளை அனுசரித்து மூன்றாம் தவணைக்காக பாடசாலைகளை திறப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சு செயலாளர் ஆர்.தியாகலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளை மூன்றாம் தவணைக்கு திறப்பதை பிற்போடுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பாடசாலைகள் திட்டமிட்டபடி எதிர் வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் உடனடியாக பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாது.

எனவே, பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான முடிவுகளை எடுக்குமாறு அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தியுள்ளோம் - என்று மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (1)

## பலாலி ஆசிரிய மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.25

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் இன்று ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் தமக்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின்தலைவர் வே.பிரபாகரனின் உருவம் கழுத்தில் கயிறிட்டு, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது.

சுமார் நான்கு அடி உயரமான அந்த உருவம் மின்கம்பம் ஒன்றில் உயரத்தில் தொங்கவிடப்பட்டிருந்ததை நேற்றுக் காண முடிந்தது.



கீழ்க்கண்ட வாசகம் எழுதப்பட்ட காகித அட்டை, உருவத்தில் கட்டப்பட்டிருந்தது:

'தமிழீழம் வேண்டாம். தமிழ் மக்களின் சுதந்திரத்தை கொடு'
"தமிழ் மக்களின் சுதந்திரத்தை இல்லாமல் செய்த பயங்கரவாதிகளுக்கு தண்டனை கொடு" - யாழ். மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் மூன்று இந்து மத அமைப்புகள் நேற்று ஈழத் தமிழரை ஆதரித்து ஊர்வலம்

சென்னை,ஓக.25

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கை அரசுக்கு எதிராகவும் நேற்று தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று இந்துமத இயக்கங்கள் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தின.

இந்து மக்கள் கட்சி, பாரதிய போவேர்ட் பிளாக், தனித் தமிழர் சேனை ஆகிய அமைப்புக்களே இப்போராட்டத்தை நடத்தின. இவர்கள், சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை நோக்கி, கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாகச் சென்ற னர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக, ஒருங்கிணைப்பாளரான இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜூன் சம்பத் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது முழுக்க முழுக்க மதரீதியான பிரச்சினை யாகும். அங்கே சிங்கள பௌத்த பிக்குகளின் பிடியிலேதான் சிங்கள அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மதவாத அரசாக அங்கு இருக்கக்கூடிய பெரும்பான்மை சிங்கள அரசின் இந்துத் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை காரணமாகத்தான் இவ்வளவு பிரச்சினை வெடித்துள்ளது - என்றார்.

"வேடிக்கை பார்க்கும் மத்திய அரசே இராணுவத்தை அனுப்பிவிடு! தமிழர்களைக் காத்திடு. இந்துக்களைக் காத்திடு!" என்ற கோஷங்கள் பேரணியில் எழுப்பப்பட்டன.

இந்த ஊர்வலத்தை இலங்கை துணைத் தூதரகத்துக்கு மிகத் தொலைவிலேயே நிறுத்திய பொலிஸார், கலந்துகொண்ட அனைவரையும் கைது செய்தனர். பின்னர் இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். (ஐ-12)

# தென்பகுதியில் கடமையாற்றும் அரச அலுவலரை கப்பலில் அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு

## பாதுகாப்பு அனுமதி பெற இன்று விவரம் பதியுமாறும் அழைப்பு

யாழ்ப்பாணம் ,ஓக.25

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பலில் தற்பொழுது யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள தென்பகுதியில் கடமையாற்றும் அரச அலுவலர்களை ஏற்றிச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

குறிப்பிட்ட கப்பலில் சுய விருப்பில் பயணம் செய்ய விரும்பும் அலுவலர்கள் மாத்திரம் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்துக்கு சமுகமளித்து தமது விவரங்களை பதிவுசெய்து கொள்ளலாம் என்றும் -

யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

கப்பல் சேவை குறித்து யாழ்.அரச அதிபர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தென்பகுதியில் கடமையாற்றும் அரச அலுவலர்கள் முன்னுரிமை அடிப்படையில் கப்பலில் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. முதற் கட்டமாக மேற்படி அரச அலுவலர்களுக்கு பாதுகாப்பு அனுமதி பெறப்படவுள்ளது.

எனவே, ஏற்கனவே பயணம் செய்வதற்கான பதிவுகளை மேற்கொண்டிருந்தாலும் மேலதிக விவரங்கள் தேவைப்படுவதால் தென்பகுதியில் இருந்து வந்த உத்தியோகத்தர்கள் மாத்திரம் பின்வரும் தகவல்களுடன் இன்று காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்துக்கு தவறாது சமுகமளித்து கீழ்க் குறிப்பிடப்படும் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

உத்தியோகத்தர் பெயர், தேசிய அடையாள அட்டை, கடமையாற்றும் திணைக்களத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ அடையாள அட்டை, யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் முகவரி, தென்பகுதியில் தங்கியிருக்கும் முகவரி, யாழ்ப்பாணத்துக்கு வந்த திகதியும் காரணமும், ஆகிய விவரங்களே இவ்வாறு பதிவுசெய்யப்படவுள்ளன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊரடங்குச் சட்டத்தை நீக்கி உணவு விநியோகத்தை சீராக்குக!

## ஜனாதிபதியிடம் யாழ். ஆயர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 25

யாழ்.குடாநாட்டில் மனிதாபிமான நெருக்கடியைத் தணிப்பதற்கு ஊரடங்கை நீக்கி உணவு விநியோகத்தை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரியிருக்கிறார் யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம்.

யாழ். குடாநாட்டில் ஒரு லட்சத்து 29 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான மக்களுக்கு ஒழுங்காக இதுவரை நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. அரசு தற்போதுதான் அவர்களுக்கு கொஞ்சமாவது நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது. மின்சாரம் சீராகக் கிடைப்பதில்லை. வெகு விரைவில் தற்போது அமுலில் இருக்கின்ற ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவேண்டும். மக்களுக்கு போதியளவு உணவுப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு குறிப்பாக மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

மக்களுக்கு வேண்டிய எரிபொருள்களும் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என ஆயர். ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறார்.

(ஐ - 12)

# யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மாகாண கல்வி அலுவலரின் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25

ஏ-9 வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டதை அடுத்து, யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண கல்விசார் அலுவலர்களின் விவரம் திரட்டப்படவுள்ளது.

குறிப்பாக, யாழ்.மாவட்டம் தவிர்ந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட வலயக் கல்வி அலுவலகங்கள், பாடசாலைகளுக்குச் சமுகமளிக்க முடியாமல் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார் என்றும் -

இதனையடுத்து சம்பந்தப்பட்ட அலுவலர்களை எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் யாழ்.கல்வி வலயத்துக்குச் சமுகமளித்து கிளிநொச்சி கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் இ.தவராசாவை சந்தித்து விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும் - தேசிய அடையாள அட்டை, உத்தியோகத்தை உறுதிப்படுத்தும் அடையாள அட்டை என்பவற்றை எடுத்து வருமாறும் - கேட்கப்பட்டுள்ளது.

# நூலகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25

இலங்கை நூலகச் சங்கத்தினால் நாளையும், நாளைமறுதினமும் நடத்தப்படவுள்ள நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 (2005/06) பரீட்சை குடாநாட்டின் அசாதாரண நிலைமையயடுத்து யாழ்ப்பாண நிலையத்தில் நடைபெற மாட்டாது என்றும் -

யாழ். நிலையத்தில் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## விடுதலைப் புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பு ஒன்றை அனுப்பியிருந்தோம்.

தடை விதிக்கும் எச்சரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் நடைமுறைப்படுத்த முயலுமானால் வன்செயல்களும் தலைநகர் கொழும்பு மீதான தாக்குதல்களும் அதிகரிக்கும் என அதில் எச்சரித்தோம்.

மோசமான விளைவுகளின் பின்னணி குறித்து ஏழு அம்சங்களை அந்தக் குறிப்பில் நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். அதுதான் இப்போது நடக்கின்றது.

ஆகவே, நிலைமை என்னவாகும் எனத் தங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்றோ அல்லது அது குறித்து முன் கூட்டியே சமிக்ஞை காட்டப்படவில்லை என்றோ அவர்கள் (ஐரோப் பிய ஒன்றியம்) கூற முடியாது.

எங்களது குறிப்பு கருத்தூன்றி - கவனமாக - படிக்கப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். ஆனால், உயர்மட்ட முடிவு (புலிகளைத் தடை செய்யும் தீர்மானம்) பிரஸல்ஸ் நகரின் ஹோட்டல்களில் (Cates of Brussels) எடுக்கப்பட்டன.

அந்த முடிவு தவறு என்றே கூறுவேன். அது பிழையான தீர்மானம்.

ஏனென்றால், இலங்கை அரசும், புலிகளும் சமதரப்புப் பங்காளிகள் என்ற நிலையிலேயே யுத்த நிறுத் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அப்படியிருக்கையில் ஒரு தரப்பைத் திடீரெனப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்தால் அது நெருக்கடியைத்தான் ஏற்படுத்தும். அதுதான் நடந்துள்ளது.

இலங்கை ஒரு பொறுப்புள்ள அரசு என்ற முறையில், போருக்குப் பதிலாக சமாதானத்தை நோக்கிப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் என்றுதான் ஐரோப்பிய ஒன்றியம் எண்ணியிருக்கும் என நான் நினைக்கிறேன்."

- என்று கூறிய அவர், அதற்கு மேல் அது குறித்து அதிகம் விவரிக்கவில்லை.

நாடு யுத்தத்தை நோக்கிச் சென்றாலும் இந்தப் பிணக்குக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது என்பதை எல்லோரையும் விட அதிகளவில் தாம் ஏற்றுக் கொள்கிறார் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய யுத்தச் சூழ்நிலை ஏற்பட்டமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடைவிதித்ததும் ஒரு முக்கிய காரணம் என்று நோர்வே அனுசரணைத் தரப்பின் விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவரும் அண்மையில் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

(உ)

## தீவுப்பகுதிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளிலும் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பொதுமக்கள் பலரும் ஆங்காங்கே காவலுக்கு நின்ற படையினரால் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்று தீவகத் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் - தீவுப்பகுதியின் மற்றொரு நுழைவாயிலான பொன்னாலைப் பாலம் ஊடாக காரைநகருக்குள் உள்நுழையவோ, அங்கிருந்து வெளிச்செல்லவோ நேற்று நண்பகல்வரை எவரும் அனுமதிக்கப்படவில்லை. எனினும், நண்பகலுக்குப் பின்னர் ஒருசிலர் காரைநகரிலிருந்து வலிகாமம் பகுதிக்கு வந்துசேர்ந்தனர்.

இதேவேளை - காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் நடத்தப்பட்டு வரும் பாதைப்படக்குச் சேவையும் நேற்று நடைபெறவில்லை. இதனால், காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் அரச அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் நேற்றையதினம் ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினர்.

தீவுப்பகுதிக்கான பொதுப்போக்குவரத்து நேற்றையதினம் படையினரால் மறுக்கப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை.

அதேவேளே - தீவுப்பகுதியில் ஆங்காங்கே படையினர் நேற்று சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொண்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. எனினும், அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (51)

## யாழ்.-திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் நேற்றிரவு வரை, அந்த முயற்சி தொடர்பாக இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சுகுமார் ஹொக்லூட் தெரிவித்தார்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்துள்ள மேர்ஷ் றுகுணு என்ற கப்பலில் பயணிகளுக்கான போக்குவரத்து வசதி இல்லை என்பதால் பயணிகள் அதில் ஏற்றிச்செல்லப்பட மாட்டார்கள் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (1)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இதற்கிடையில் - நேற்றைய தாக்குதல் சம்பவத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதி ஒருவர் "தினந்தோறும் காலையில் படைத் தரப்பினருடனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகொண்டு அவர்களின் ஒப்புதலுடனேயே நாம் சோதனைச் சாவடிகளில் கடமைகளில் ஈடுபடுவோம். இன்றைய தினமும் (வெள்ளிக்கிழமை) வழமை போன்று இரு தரப்பினரிடமும் சோதனைச் சாவடியை திறப்பது குறித்து ஒப்புதல் பெற முயற்சிப்போம். இரு தரப்பும் சம்மதித்தால் சோதனைச் சாவடி திறப்பது சாத்தியமாகும்" - என்றார். (164)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ந்த சொத்துக்களும் கோவைகளும் தீயணைப்புப் படை போவதற்கு முன்னரே எரிந்து நாசமாகி விட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த-1)

## தலைக்கு மேலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எப்படிப் பேச்சு நடத்த முடியும்?

"விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்கள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் மீன்பிடியை ஜீவனோபாயத் தொழில்களாகக் கொண்டவர்கள். ஆகவே, இராணுவத்தின் கெடுபிடிகள் பாரியளவில் அவர்களைப் பாதிக்கவில்லை. ஆனால், குடாநாட்டு மக்கள் பாரிய சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர். மூதூர் மற்றும் மட்டக்களப்பு மக்கள் பாரிய பொருளாதாரச் சுமைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

"பாதிக்கப்பட்ட மக்களுக்கு கப்பலில் உணவுப் பொருட்கள் அனுப்புவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், எவ்வளவு காலத் துக்கு இந்த உணவுப் பொருட்கள்? அப்படியானால், எமது பகுதியில் உள்ள மக்களின் நிலை என்ன?

"இப்படியான பல அத்தியாவசியப் பிரச்சினைகள் எமது மக்களைச் சூழ்ந்துள்ளன. அதற்கு அரசே காரணமாக உள்ளது. இந்நிலையில் அமைதிப் பேச்சுகளுக்கு அறவே சாத்தியமில்லை" என்றார் அவர். (ஐ)


## தேவை

பத்திரிகைக்கான செய்திப் படங்களை எடுப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. கமெராக்கள் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தேவைப்படின் தங்குமிட, உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*


## முகவர்களின் கவனத்துக்கு

தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக சகல பிரதேசங்களுக்கும் உதயன் பத்திரிகையை விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகம் நடைபெறுவதால் உதயன் முகவர்கள் நேரில் வந்து பத்திரிகையை எடுத்து விற்பனை செய்ய வசதி செய்யப்படும்.

இது சம்பந்தமான விவரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். 222 9933, 222 3837.

*- நிர்வாகத்தினர்.*

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறு[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org